செ. வெ. எண் 749 நாள் 19-11-2007

## செய்திக் குறிப்பு

# "27 - நட்சத்திர சுற்றுலா"

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பல்வேறு வகையான சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. அவற்றுள் 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா, 6 நாட்கள்மூகாம்பிகை சுற்றுலா, 3 - நாட்கள் நவக்கிரக சுற்றுலா, மற்றும் 4 - நாட்கள் 108 - அம்மன் திருக்கோயில் சுற்றுலா ஆகிய வரிசையில் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப 27 நட்சத்திர சுற்றுலா தற்போது அறிமுகப்படுத்த உள்ளது. இச்சுற்றுலா ஐந்து நாட்கள் சுற்றுலாவாகும்.

இச்சுற்றுலா ஒவ்வொரு வாரமும் புதன் கிழமை காலை 6.00 மணிக்கு புறப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள அவரவர் பிறந்த ஜென்ம நட்சத்திர தலங்களாக போற்றப்படும் வழிபாட்டு இடங்களை தரிசனம் செய்து விட்டு ஞாயிறு மாலை 6.00 மணி அளவில் சென்னை வந்தடையும்.

இச்சிறப்பு சுற்றுலாவிற்கான கட்டணம் வருமாறு:

பெரியவர் ரூ.3,800/– (ஒரு நபர் மட்டும்)
சிறுவர் ரூ.3,200/- (ஒரு நபர் மட்டும்)

இச்சுற்றுலாவின் போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் போக்குவரத்து வசதி, தங்குமிட வசதி மற்றும் திருக்கோயில் தரிசன வசதி ஆகியவைகளை சிறப்பான முறையில் செய்து வருகிறது. இச்சுற்றுலாவின்போது இரவு தங்கும் இடங்கள் வைத்திஸ்வரன் கோயில் தஞ்சாவூர், மதுரை காஞ்சிபுரம். இச்சுற்றுலாவில் திருக்கோயிலை தரிசிக்க தினமும் காலை 6.00 மணிக்கு புறப்பட்டு தங்கும் இடத்திற்கு இரவு 9.00 மணிக்கு சென்று அடையும்.

இவ்வாண்டின் முதல் சுற்றுலாவினை 21-11-2007 அன்று காலை 6.00 மணி அளவில் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. என்.சுரேஷ்ராஜன் அவர்கள் சுற்றுலா வளாகத்திலிருந்து திருவாளர்கள் டாக்டர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., செயலர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை மற்றும் தலைவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், டாக்டர் மூ.இராசராம், இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அவர்கள் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைக்க உள்ளார்கள்.

சுற்றுலா பயணிகள் மேலும் விவரங்கள் மற்றும் பயண முன் பதிவு பெற கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
சுற்றுலா வளாகம்,
எண். 2 வாலாஜா சாலை.
கலைவாணர் அரங்கம்,
சென்னை - 2 / தொலைபேசி எண்.044- 25383333/ 25384444/ 25389857
மின் அஞ்சல் ttdc@vsnl.com.
இணையதளம் www.tamilnadutourism.org
நிகரி 044 -25361385

2) த.சு வ கழக விற்பனை பிரிவு
எண். 4 ஈ.வெ.ரா சாலை,
சென்னை – 3 / தொலைபேசி எண் 044 -25384356/ 25382916

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை -9.